[1975 மார்ச் 17]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பொதுவாக அகில இந்தியா விலே நூலுக்கு ஏற்பட்ட விலையேற்றமும், அதன் விளைவாக அதை வாங்கு வதிலே ஏற்பட்ட தாமதத்தினால்தான். ஆகவே, இது நம்முடைய மாநிலத் திற்கு மட்டும் தனியாக ஏற்பட்டதல்ல.

Distribution of yarn

* 344 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether any new system for the distribution of yarn for the weavers has been introduced from October 1973 ; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : 1973-ம் ஆண்டு அக்டோபர் மாத முதல் நூல் வினியோகிக்க புதிய திட்டம் எதும் தொடங்க வில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது நூல் எந்த எந்த அடிப்படையில் நெசவாளர்களுக்கு விநியோகிக்கப் படுகிறது என்கிற விபரத்தை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு முறையிலே உற்பத்தி செய்யப்படுகிற நூல் நம்முடைய கோ - ஆப்டெக்ஸ் கூட்டுறவுத் தலைமை நிலையத்தின் மூலமாக அங்கங்கே உள்ள டெப்போக்கள் மூலமாக ஒவ் வொரு கூட்டுறவு சங்கத்திற்கும் தேவையான நூல் வழங்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : நூல் ஆங்காங்கே விநியோகம் செய்வதற்கு கூட்டுறவு சேவா கைத்தறியாளர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டதே அந்தச் சங்கங்கள் மூலமாக நூல் விநியோகிக்கப்படுகிறதா ? அந்தச் சங்கங்களுக்கு எதாவது பொறுப்பு அளிப்பதற்காகத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த வகையிலே இந்தப் பணியை அவர்களிடம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர தனியார் துறையிலே உள்ளவர்கள் நூல் வாங்குவதற்காக சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் தொடங்கப்பட்டிருக்குமானால் அவற்றின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற திட்டத்தைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். நாம் உற்பத்தி செய்கிற நூலில் முதல் உரிமை கூட்டுறவு நெசவாளர்களுக்கு வழங்கப் படுகிறது. மீதி வாய்ப்பு அதிலே இருக்குமானால் சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடீஸ் மூலமாகக் கொடுக்கலாமென்று முடிவெடுத்தோம். சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகளை மேலும் வளர்க்கின்ற வாய்ப்புகளை நாம் உருவாக்கியாகவேண்டும்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலே சில நேரங்களிலே நூல் தேக்கம் ஆகிவிடுகிறது என்று பெரிய பரபரப்பான செய்திகள் வந்துவிடுகின்றன. இன்னும் சில நேரங்களில் நூல் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று பெரிய பயங்கரமான செய்திகள் வருகின்றனவே, இது சமமான நிலைக்குக் கொண்டுவரப்பட அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மாநில அரசைப் பொறுத்த வரையில் திட்டவட்டமான ஒரு கொள்கையைச் சொல்லி வருகிறோம். அகில இந்தியாவை எடுத்துக்கொண்டாலும் ஆலைகளிலே உற்பத்தியாகிற நூலில் சுமார் 62½ சதவீதம் கைத்தறியாளர்களுக்குத் தேவைப்படுகிறது. அதை வாங்கி கைத்தறியாளர்களுக்குக் கொடுத்தாலொழிய இந்தக் கஷ்டம் நீடிக்கத்தான் செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி : கூட்டுறவிலே உள்ள நெசவாளர்களுக்கு நூல் விநியோகம் செய்வதிலே புதிய ஏற்பாடு கொண்டுவருவதற்கு ஏற்பாடு இருக்கிறதா என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பணத்தைக் கட்டித்தான் நூல் எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் எல்லா மாநிலச் சங்கங்களும் அதை வாங்குவதற்கு காசு இல்லை என்று சொல்கிறார்கள். நூலை கடனாக அவர்களுக்குக் கொடுத்து அதற்குப் பதிலாக துணிகளை வாங்கிக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கிற முறை ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் மத்திய வங்கி பண உதவி செய்து வருகிறது. அந்த அடிப்படையிலேதான் நூல் வாங்கப்படுகிறது. அவர்கள் குறிப்பிட்டதுபோல தேக்கம் இருப்பதால்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதைப்பற்றி நம்முடைய பிரதம அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோரிடம் பேசி தென் மாநிலங்களில் உள்ளவர்களுக்கு ரிசர்வ் வங்கி விதிமுறைகளைத் தளர்த்தி—தேக்க நேரத்தில்—அதிக நிதிவசதியைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : மீடியம் நூல், மீடியம் துணி உற்பத்தி செய்வதற்கு ஏற்ற முறையிலே மீடியம் நூல் 80 சதவீதம் ஆலைகளிலே இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. மீடியம் துணி உற்பத்தியாளர்கள் மீடியம் துணி அதிகமாக உற்பத்திசெய்தால்தான் விலை குறையும். ஆகவே அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா? தேக்கம் அடைந்திருப்பது ஹைகவுண்ட் நூலா அல்லது லோகவுண்ட் நூலா என்பதையும் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நூல் தேக்கம் என்பது பெரிய பிரச்சினை. அகில இந்திய அளவிலே சில ஆண்டுகளுக்கு அதிகத் தேக்கம் என்று இருக்கிறது, சில ஆண்டுகளுக்கு அதிகப் பற்றுக்குறை என்று இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கைத்தறித் துணி தேக்கத்தினால் நெசவாளர்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை நம் முன்னால் இருக்கின்ற ஒன்று அல்ல.

1975 மார்ச் 17]

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிஸ் அதிகமாக ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். சந்தானம் கமிட்டியின் சிபாரிசின் பேரிலே தனியார் துறையிலே உள்ள எல்லாக் கைத்தறியாளர்களுக்கும் உதவி செய்யக்கூடிய முறையிலே அந்த நோக்கத்துடன் சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த வகையிலே பணம் கட்டி அப்படிப்பட்ட சொஸைடிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இதுவரையிலே எந்தவிதமான நூலோ சாயமோ விழுதோ அல்லது அச்சோ தரப்படவில்லை என்று புகார்கள் வருகின்றனவே; ஆகவே இந்தக் கஷ்டமான நேரத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே; இந்தக் கஷ்டமான நிலைமையைப் போக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கஷ்டமான நேரத்திலே பணம் இல்லை என்பதுதான் பிரச்சினை; நூல் இல்லை என்பதல்ல. சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் முழுவதும் செயல்படவில்லை என்று சொல்லவில்லை. நெசவாளர்களுக்கு அவர்களுக்குத் தேவைப்படுகின்ற மொத்தத் தேவையை நாமே வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்; அதை வாங்கிக்கொடுப்பதற்கு வாய்ப்பு வசதி இல்லை. சிவராமன் குழுவினர் அகில இந்தியாவிலே உற்பத்தியாவதிலே $62\frac{1}{2}$ சதவீதம் கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலாக உற்பத்தி செய்து மாநில அரசாங்கம் அவர்களுக்கு வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இதைப்பற்றி மத்திய அரசாங்கம்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசாங்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிற மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதை எடுத்துச் சொல்லி கவனிக்கச் செய்ய வேண்டும்.

நான் இது சம்பந்தமாக ஒரு மத்திய அமைச்சரைச் சந்தித்துப் பேசினேன். தமிழ்நாட்டிலே எங்களுடைய அரசாங்கம் டேக்கன் ஓவர் செய்திருக்கிற மில்களிலே உற்பத்தியாகிற நூலைக்கூட தமிழ்நாட்டிலே இருக்கிற நெசவாளர்களுக்குக் கொடுப்பதற்கு வழிவகை இருக்கவேண்டுமென்று கேட்டோம். ஆனால் அவர்கள் சொன்னார்கள்; நாங்கள் வோட்டுகளைப் பற்றித்தான் கவலைப்படுகிறோம்; இந்திரா காந்தியின் தலைமைக்கு வெற்றியைப் பெற்றுத் தருவதிலேதான் கவலைப் படுகிறோம்; வோட்டுக்களைப் பெறுவதற்கு எந்த முறையைப் பின்பற்றினால் வோட்டுக்களைப் பெற முடியுமோ அந்த முறையைப் பின்பற்றுவோம் என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். நல்ல காலம் நான் அதைக் கேட்டபோது அவர் பதில் சொன்னபோது தென்மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ் அமைச்சர்களும் கூட இருந்தார்கள். இதுபோன்ற பல கோரிக்கைகளை நாம் வைத்திருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பக்கத்திலே இருக்கிறபோது நல்ல பதில் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன்; காங்கிரஸ் அமைச்சர்கள் இருந்தபோதும்கூட அந்த அமைச்சர் வெட்கப் படும்படியான பதிலைச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற மில்களில் உற்பத்தியாகிற நூலை கைத்தறியாளர்களுக்குக் கொடுப்பதற்குக்கூட எங்கே தடை வந்துவிடுமோ என்ற பயம் இருக்கிறது.

அந்த அமைச்சர் மௌரியா என்பவர்; அந்த அமைச்சர் எப்படி இந்த இலாக்காவை நடத்தப்போகிருர், எதிர்காலத்தில் எப்படி நெசவாளர்களைப் பாதுகாக்கப்போகிருர் என்ற பயம் எனக்கு இருக்கிறது. நண்பர் சுரேந்திரன் அவர்கள்தான் கை கொடுக்கவேண்டும்.

சத்திரப்பட்டியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

*345 வினு—திரு. ச. சுப்பு : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சத்திரப்பட்டியில் "வீரபாண்டிய கட்டபொம்மன்" நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்குமாறு கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வீரபாண்டிய கட்டபொம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க மதுரையிலுள்ள இராமநாதபுரம் உதவி கைத்தறி இயக்குநருக்கு விண்ணப்பம் வந்தது.

(இ) சங்கம் பதிவு செய்வதற்கு முன்ஞல் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் ஒப்புதல் கோரி உதவி இயக்குநர் எழுதியுள்ளார்.

Drinking Water Supply for Puthukadai area.

***346 *Q.*—Thiru R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—**

(*a*) whether there is any proposal to provide drinking water facilities to the Puthukadai Town Panchayat in Munchirai Union, Vilavancode taluk ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) புதுக்கடை, முஞ்சிரை, பார்த்திவபுரம் மற்றும் ஆழங்குளம் ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டி ஆய்வு வேலைகள் செய்யும் பொருட்டு ரூ. 10,800-க்கு ஆய்வு மதிப்பீடு ஒன்றினுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 17-6-1974-ல் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கூறிய ஊராட்சிகள் தமது விகிதாச்சார ஆய்வுத் தொகையினை கடந்த ஆண்டு அக்டோபரில்தான் கட்டியுள்ளன. எனவே, ஆய்வு வேலைகளை விரைவில் தொடங்கி முடித்து திட்ட மதிப்பீடு தயாரித்து அனுப்பிவைக்குமாறு தலைமைப் பொறியாளருக்கு குடிநீர் வடிகால் வாரியம் உத்தரவிட்டுள்ளது.